**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்**

**அ.வ.எண். 243/2020**

2024 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 03-ம் நாள் செவ்வாய்கிழமை **வா.சா.2**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : விஜயகுமார் | தொழில் | : |
| த/பெ | : | கிராமம் | : |
| வயது | : | தாலுகா | : |
| ஜாதி | : | மாவட்டம் | : |
| சமயம் | : | | |

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு அழைப்பாணை வரவில்லை என்றால்சரிதான். வாதி அழைத்ததற்காக சாட்சியம் அளிக்கவந்துள்ளேன் என்றால் சரியல்ல நானே வந்தேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். வாதியை குருசாமி என்பவர் கூட்டீட்டுபோன வகையில் தெரியும். வாதி என்ன தொழில்செய்கிறார்என்று தெரியாது. இந்த வழக்கில் பிரதிவாதிகளை எனக்கு தெரியும். முருகசாமி எனக்கு விவசாயத்தற்கு ஆடுமாடு வாங்கிய வகையில்தெரி-யும் பத்து வருடங்களாக தெரியும். எனது சித்தப்பா மூலம் அவர் பழக்கம். எனது சித்தப்பா பழனிச்சாமி. நான் இது வரை கடனுறுசி சீட்டு எழுதியதில்லை. இவ்வழக்கின் கடனுறுதி சீட்டைதான் முதன் முதலில் எழுதினேன். வா.சா.ஆ.1 யை வாதியின் வீட்டில் வைத்து எழுதினேன். அதை எழுதுவதற்கு முருகசாமிதான் என்னை அழைத்து சென்றார். கடனுறுதி சீட்டு எழுதுவதற்காகத்தான் நான்வாதியின் வீட்டிற்கு சென்றேன், நான் சென்ற போது

வாதி மட்டும் தான் இருந்தார் அப்போது காலை சுமார் 9.00 மணியிருககும். என்னுடன் செந்தில்குமார்என்பவர் வந்தார். மேற்படி செந்தில் குமார் என்னுடன் படித்தவர். முருகசாமி தான் என்னை அவரது ஆம்னி வேனில் கூட்டிச்சென்றார். கடனுறுதிசீட்டை முருகசாமி கொண்டு வந்தார். சுமார் 8.00 மணிக்கு என் வீட்டிற்கு வந்து என்னை கூட்டிச்சென்றார். அவர் 10.00 மணிக்கு திரும்ப சென்றோம். வாதி, முருகசாமிக்கு ரூ.500 தாள்களாக பணம் கொடுத்தார் மொத்தம் 24 கட்டுகள் பணம் கொடுக்கப்பட்டது. முருகசாமி வீட்டு ஆண்டிபாளையத்தில் உள்ளது நான் அங்கு சென்றிருக்கிறேன். முருகசாமி 31.12.2019 ம் தேதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதற்கு 4 வருடத்திற்கு முன்பே அவர் வாத நோயால் பாதிக்கப்பட்டு படுத்தபடுக்கையாக இருந்தார் என்றால் சரியல்ல. மேற்படி முருகசாமி, வாதியிடமிருந்து எந்த தொகையும் பெறவில்லை என்றாலும், கடனுறுதிசீட்டு எழுதி கொடுககவில்லை என்றாலும் சரியல்ல. வா.சாஆ.1 ல் உள்ள கையெழுத்து முருகசாமியுடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல. வாதி, பிரதிவாதியிடமிருந்து பணம் பெறவேண்டும் என்பதற்காக போலியாக கடனுறுதிசீட்டை உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளார் என்றாலும் அதற்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2024.12.04 18:45:28 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.